மன்றக் கூட்டத்திலே தீர்மானம் கொடுத்துபேசப்பட்டிருக்கிறது. எனவே தயவு கூர்ந்து அரசு மருத்துவ மனையில் படுக்கை வசதிகளை அதிகரிக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பின ருடைய கேள்வி நியாயமாக இருந்தாலும், நிதிவசதிகளுக்கேற்ப அந்தப் பிரச்சினை கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையிலுள்ள குடிசைப்பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத் திற்கான யூனிசெப் நிறுவனத்தின் உதவி.

*344 (வினா எண் 20823) திரு. பெ. சு. திருவேங்கடம் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1983 மே மாதத்தில் சென்னை குடிசைப் பகுதி களுக்கு யூனிசெப் உதவி பற்றி ஒப்பந்தம் ஆகியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) எவ்வளவு உதவி கிடைக்கும்?

(ஈ) எவ்வித பணிகளுக்குச் செலவழிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகரில் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பராமரிப்பிலுள்ள குடியிருப்புத் திட்டங்களில் வசித்து வரும் மக்களும் வாரியத்தால் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களும் சேர்ந்து சுமார் 50,000 குடும் பங்கள் பயன்பெறும் வகையில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு யூனிசெப் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டு நிதி உதவி பெறப்பட்டுள்ளது. இந்தப் பகுதி மக்களுக்கு சுற்றுப்புறச்சுகாதாரம், மருத்துவம், கல்வி வேலை வாய்ப்பு, சத்துணவு போன்ற வசதிகள் பெறவும் இவ்வாரியம் ஏற்கனவே பல்வேறு திட்டங்களின்கீழ் அமைத்துக் கொடுத் துள்ள சாலைகள், கழிவறைகள் போன்ற வசதிகளை குடிசை வாழ் மக்களே அரசு அல்லது மாநகராட்சியின் உதவியின்றி பராமரித்துக்கொள்ளவும், அவர்கள் இதற்குரிய நிலையை அடைய தக்க பயிற்சி ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இத்திட்டத்தில் செய்ய இருக்கும் பணிகளில் சில கீழ்வருமாறு:—

(1) பள்ளிகளில் இருந்து இடையிலே நின்றுவிட்ட இளஞ் சிறார்களுக்கு கல்வி பயில வாய்ப்பளித்தல்.

(2) குடிசைவாழ் மக்கள் தாங்களாகவே சமூக கூடங்கள் கட்டிக் கொள்வதை ஓரளவு பொருள் அல்லது நிதி கொடுத்து ஊக்குவித்தல்.

(3) குறைந்த விலையில் தனிக்கழிப்பறைகள் கட்டிக் கொள்வதற்கு ஊக்குவிப்புத் தொகை' அளித்தல்.

(4) சிறு குடும்பமே சீரான குடும்பம் என்ற தத்துவத்தை மக்களுக்கு உணர்த்துதல்.

(5) தாய் சேய் நலவாழ்விற்கு வேண்டிய அனைத்து மருத்துவ வசதிகள் சத்துணவு வசதிகள் வழங்குதல்.

(6) குடிசை வாழ் மக்கள் வாழ்ந்துவரும் பகுதிகளை சுத்தமாக வைத்துக்கொள்வதில் அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு என்பதை உணர்த்தி அவர்களிடையே பொறுப்புணர்ச்சி மேலோங்கச் செய்யும் வகையில் பராமரிப்புப் பணிகளை குடிசைவாழ் மக்களே நிர்வகிக்கும் திறனை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(இ) ரூ. 39.98 இலட்சங்கள் யுனிசெப்பிலிருந்து கிடைக்கும். மேலும் தமிழக அரசின் பங்குத் தொகையாக ரூ. 8.00 இலட்சங்கள் இத்திட்டத்திற்கு வழங்கப்படும்.

(ஈ) யுனிசெப்பின் உதவித்தொகை (ரூ. இலட்சங்களில்)

(1)	ஊழியர்களின் சம்பளத்தொகை	5.68
(2)	உபகரணங்கள்	3.00
(3)	வாகனங்கள் மற்றும் சத்தம்	7.70
(4)	குடிசைவாழ் மக்களுக்கு தன்னிறைவு திட்டங்கள் மேற்கொள்ள உதவியாக	23.60
	மொத்தம் ரூ.	39.98

மாநில அரசு உதவித் தொகை (ரூ. இலட்சங்களில்)

(1)	உபரி ஊழியர்கள் சம்பளம் தொகை	1.97
(2)	வாகனங்கள் பராமரிக்க மற்றும் எரிபொருள்	3.33
(3)	உபகரணங்கள் பராமரிக்க	1.20
(4)	இதர செலவுகள்	1.50
	மொத்தம் ரூ.	8.00

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1984 மார்ச் 16

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர்களே, இந்த யூனிசெப் நிறுவனத்துடன் மத்திய மாநில அரசுகள் சேர்ந்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதாக இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதில் சொல்லப்பட்டுள்ள ரூ.39.98 இலட்சம் யூனிசெப்பிலிருந்துகிடைக்கும், மேலும் தமிழக அரசு பங்கு ரூ. 8 இலட்சம் கிடைக்கும் என்று சொல்லி இருக்கிறார்களே, மத்திய அரசிடமிருந்து இத்திட்டத்திற்கான தொகை ஒதுக்கீடு செய்து தரப்படவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா மாண்புமிகு: துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இந்த திட்டத்திற்காக அனுமதி அளித்திருக்கிறது. நாம் இந்த செலவுகள் செய்யப்பட்டதற்குப் பின்னாலே, இதற்கான மொத்த செலவுகளையும் 5 ஆண்டுகளுக்குப் பிறகு தெரிவித்து, அதற்குப் பிறகுதான் மத்திய அரசிடமிருந்து நமக்கு உதவி கிடைக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் இந்த திட்டத்திலே இங்கே சொல்லப்பட்டிருப்பது, பள்ளிகளிலிருந்து இடையிலேநின்றுவிட்ட இளஞ்சிறார்களுக்குக் கல்வி பயில வாய்ப்பளித்தல் அதுபோன்று குடிசைவாழ் மக்கள் தாங்களாகவே சமூகக் கூடங்கள் கட்டிக் கொள்வதை ஓரளவு பொருள் அல்லது நிதி கொடுத்து ஊக்குவித்தல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது சுத்தப்படுத்துவதை எல்லாம் மாநகராட்சி கவனிப்பதில்லையா? இதற்காக தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? அப்படியென்றால், இவர்கள் எந்த இலாக்காவின் கீழே பணி புரிகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாநகராட்சி செய்கிற பணி வேறு. இந்தப் பணிகள் வேறு. இது ஒரு குறிப்பிட்ட பகுதியை எடுத்துக்கொண்டு, அங்கே வசிக்கின்ற மக்களுக்கு சுகாதார முறையிலே எப்படி இருக்கவேண்டும் என்று எடுத்துச் சொல்லி அதை விரிவான முறையில் திட்டமிட்டு, முழு நல நிலையில் இந்தக் குடிசைப் பகுதிகளை மாற்றுவதற்காக அவர்கள் ஏற்பாடுகளைச் செய்து, அந்த வகையிலே இந்தத் திட்டம் தீட்டப்படுகிறது. அது போல் அங்கே உள்ள பள்ளிக்குழந்தைகளை கணக்கில் எடுத்து, அவர்களை எல்லாம், பள்ளிகளுக்கு அழைத்துச் செல்வதற்கான வழிவகைகளைக் கண்டுபிடித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைத்தான் செய்கிறதே தவிர எல்லாவற்றையும் மாநகராட்சி செய்கிறது என்று சொல்வது சரியல்ல ஒரு குறிப்பிட்ட பகுதியிலே இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டு அந்தக் காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS